பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 07 2026 12 40**

ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தவர் ராம்விலாஸ் பாஸ்வான் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

2. மகளிருக்கான அதிகாரம் குறித்து கருத்தொற்றுமையை ஏற்படுத்தும் முயற்சியை பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு மேற்கொண்டுள்ளது.

3. நவீன பன்முக வேளாண் சாகுபடி முறைகளுக்கான ஏழு நாள் பயிற்சி இன்று ஹிமாச்சலப்பிரதேசத்தில் தொடங்கியது.

4. ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-பை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரான்ஸ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் பிறந்தநாளையொட்டி தலைவர்கள் அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களை உயர்த்துவதற்கான அரும்பணியை ராம்விலாஸ் பஸ்வான் மேற்கொண்டார் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் அர்ப்பணிப்போடு கடமையாற்றியவர் பாஸ்வான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், தமது வாழ்க்கையை ஏழை எளிய மக்களின் நலனுக்காக அர்ப்பணித்துக்கொண்டவர் ராம்விலாஸ் பாஸ்வான் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக மாண்புகளையும், மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் அவர் ஈடுபட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத்திற்கு அவர் ஆற்றியுள்ள பங்கு, எதிர்கால சந்ததியினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் உள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதவில், ராம்விலாஸ் பாஸ்வான் தனது வாழ்க்கையை சமூகநீதி மற்றும் ஜனநாயக மாண்புகளை பாதுகாக்கவும், ஷெட்யூல்டு வகுப்பினர், பிற்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காகவும் அவர் அரும்பாடுபட்டவர் என்று கூறியுள்ளார்.

மனித உணர்வுகளுக்கு மிகுந்த மதிப்பளித்து வந்த அவர், அரசு நிர்வாகத்தில் சிறந்த கொள்கைகளை வடிவமைத்துக் கொடுத்தவர் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<>>>>

இந்தியா தலைமையேற்று நடத்தும் இரண்டு நாள் பிரிக்ஸ் மகளிர் செயற்குழுக் கூட்டம் நாளை கேரள மாநிலம் கொச்சியில் தொடங்குகிறது.

இதுதொடர்பாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் முக்கிய அதிகாரிகள் இதில் கலந்துகொண்டு மகளிருக்கான

அதிகாரங்கள் குறித்தும், மகளிர் தலைமையிலான வளர்ச்சி குறித்தும் எடுத்துரைக்க உள்ளனர்.

மகளிர் தலைமையிலான மேம்பாட்டுக்கு ஒத்துழைப்பை ஏற்படுத்தும் ஒரு வாய்ப்பாகவும் பிரிக்ஸ் மகளிர் செயற்குழுக் கூட்டம் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்னணு மற்றும் நிதி கட்டமைப்பில் பெண்களின் ஆக்கப்பூர்வமான பங்கு குறித்தும், அவர்களின் செயல்திறனை மேம்படுத்தி தொழில்முனைவோராக ஊக்குவிப்பது குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் பருவநிலை செயல்பாடுகளில் மகளிரை கொண்டு வருவது குறித்தும் இதில் விவாதிக்கப்படுகிறது.

இம்மாதம் 8, 9 தேதிகளில் நடைபெற உள்ள பிரிக்ஸ் நாடுகளின் பெண் அமைச்சர்கள் கூட்டத்திற்கு முன்னோடியாக இந்த செயற்குழுக் கூட்டம் அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் உள்ள அமர்நாத் கோவில் புனித யாத்திரை தொடங்கி கடந்த 2 நாட்களில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பனிலிங்கத்தை தரிசித்துள்ளனர்.

நேற்று மட்டும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் லிங்கத்தை வழிபட்டனர்.

இது கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு கூடுதலாக யாத்ரீகர்கள் வரத் தொடங்கியுள்ளனர்.

அமர்நாத் யாத்திரைக்கான பதிவுகளும் அதிகரித்துள்ளன.

நேற்று இரண்டாம் நாள் யாத்திரையில் 14 ஆயிரம் ஆண்கள், 4 ஆயிரம் பெண்கள், 380 குழந்தைகள், 142 சாதுக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

480க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே 4வது கட்ட யாத்ரீகர்கள் குழு பகவதி நகர் முகாமில் இருந்து இன்று அதிகாலை புறப்பட்டனர்.

இதில் 6 ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட யாத்ரீகர்கள் 291 வாகனங்களில் பயணித்து வருகின்றனர்.

**4** ஆயிரத்து **131** யாத்ரீகர்கள் பஹல்காம் வழியாக புனித யாத்திரை மேற்கொண்டுள்ளனர்.

அமர்நாத் யாத்திரையை ஒட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாத்ரீகர்களுக்குத் தேவையான வசதிகளை ஜம்மு-கஷ்மீர் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

<<<<>>>>

நவீன பண்முக வேளாண் சாகுபடி முறைகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஹிமாச்சலப்பிரதேச மாநிலம் **Palampur**-ல் ஏழு நாள் பயிற்சி இன்று தொடங்கியது.

**40**க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொள்ளும் இந்தப் பயிற்சித் திட்டத்தில் நவீன வேளாண் உத்திகளைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்குவது, இயற்கை வேளாண் சாகுபடி முறைகள் உள்ளிட்டவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

காளான் சாகுபடி, தேனீ வளர்ப்பு, பாதுகாக்கப்பட்ட கட்டமைப்பில் பயிர் சாகுபடி, தோட்டக்கலைப் பயிர் அபிவிருத்தி, ஒருங்கிணைந்த சாகுபடி முறைகள், வேளாண் பொருட்களில் மதிப்புக்

கூட்டுவதற்கான தொழில்நுட்பம் உள்ளிட்டவையும் இப்பயிற்சித் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொண்டு பேசிய ஜம்மு-கஷ்மீர் தலைமை வேளாண் அதிகாரி திரு. ரஜோரி ராஜேஷ் வர்மா, விவசாயிகளுக்கு கற்றுத்தரப்படும் தொழில்நுட்ப உத்திகள் அனைத்தும் முறையாக ஆய்வு செய்யப்பட்ட பின்னரே நடைமுறைக்கு கொண்டுவரப்படுவதாகத் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சித் திட்டத்தை விவசாயிகள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக்கொண்டு தரமான வேளாண் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

அமெரிக்காவின் வளர்ச்சி மற்றும் விண்வெளி திட்டங்களுக்கு உத்வேகம் அளிக்கப்படும் என்று அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 250வது ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டத்தையொட்டி அந்நாட்டு ராணுவ வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தி பேசிய அதிபர் திரு. ட்ரம்ப், ராணுவம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தவும்,

சந்திரன் மற்றும் செவ்வாய்க்கு விண்வெளிப் பயணத் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களும் வலுப்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின், அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

அமெரிக்காவின் 250வது சுதந்திர தினத்தையொட்டி ரஷ்ய அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்புக்கு தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் யுக்ரைன் சூழல் குறித்தும் இரு தலைவர்களும் பேசியதாக ரஷ்ய அதிபர் அலுவலகம் கூறியுள்ளது.

ரஷ்யப் படையினர் தொடர்ந்து முன்னேறி வருவதாகவும், சில ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவின் நிலைப்பாட்டை சரியாக புரிந்துகொள்ளாமல் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ராணுவ அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இது தொடர்பான தகவல்களை தொடர்ந்து பரிமாறிக்கொள்ளவும் இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளதாக ரஷ்ய அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது.

யுக்ரைன் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் விரைந்து தீர்வுகாண முயற்சிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் வலியுறுத்தியதாகவும் ரஷ்ய அதிபர் மாளிகை கூறியுள்ளது.

<<<<>>>>

வெனிசுலாவில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 954ஆக உயர்ந்துள்ளது.

16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த தகவலை தெரிவித்த வெனிசுலா தேசிய சபைத் தலைவர் Jorge Rodrigues, 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்துள்ளதாகத் தெரிவித்தார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

வெனிசுலாவின் இடைக்கால அதிபர் Belcy Rodrigues, இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் 7 நாள் துக்கம் அனுசரிக்கப்படுவதாக அறிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டின் பல பகுதிகளில் அடுத்த சில நாட்களில் பருவமழை தீவிரமடையும் என்று இந்தியா வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக நாட்டின் மத்தியப் பகுதி மாநிலங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் ஆகிய பகுதிகளில் வலுப்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத், கொங்கன், கோவா, மத்தியப்பிரதேசம், ஒடிசா ஆகிய பகுதிகளில் ஆங்காங்கே கன மற்றும் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கட், கிழக்கு மத்தியப்பிரதேசம், கிழக்கு ராஜஸ்தான், கர்நாடகா, தெலங்கானா, விதர்பா ஆகிய இடங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளம், மாஹே, கடலோர ஆந்திரா ஆகிய இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், மணிப்பூர், மிசோரம், ராஜஸ்தான் ஆகிய இடங்களிலும் ஆங்காங்கே கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் மும்பையில் கடந்த 4 நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இதுவரை 59 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

இது ஜூலை மாதத்தில் வழக்கமாக பெய்யும் மழையும் 74 சதவீதமாகும்.

மும்பை புறநகர் பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 31 சென்டி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மும்பை கடலோரப் பகுதிகள், தானே ஆகிய இடங்களில் கடுமையான சூறைக்காற்று வீசுவதால் அப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் தேங்கிய நீரை அப்புறப்படுத்துதல், போக்குவரத்திற்கு ஏதுவாக சாலைகள் சீரமைத்தல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மும்பை, தானே, **Palghar** மாவட்டங்கள் மற்றும் வனப் பகுதிகளில் அடுத்த **2** நாட்களுக்கு மிக கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**Raigad-**ல் உள்ள சாவித்ரி, குண்டலிகா, அல்ஹாஸ் ஆகிய முக்கிய ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

**Mahad** பகுதியில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. கொங்கன் பகுதியில் பெய்து வரும் மழையால் அங்குள்ள அணைகள் நிரம்பியுள்ளன.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரான்ஸ், பராகுவேயை வென்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஃபிலடெல்ஃபியாவில் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றுப் போட்டியில் **1-0** என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வெற்றி பெற்றது.

காலிறுதியில் பிரான்ஸ் - மொராக்கோவை சந்திக்க உள்ளது.

**<<<<The End>>>>**